2015 பிப்ரவரி 18]

மருத்துவப் பிரிவிற்குக் கட்டடம் கட்டித் தருவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஏரியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அதில் சித்த மருத்துவப் பிரிவு நல்ல முறையில் இயங்கிவருகிறது. கட்டட வசதி இன்மையால் அந்த மையம் சீராகச் செயல்படுவதில் சிரமம் இருக்கிறது. அதிகமான மக்கள் பயன்பெறுகின்ற காரணத்தால், அதைக் கவனத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அங்கு கட்டடம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பாராட்டிற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சித்த மருத்துவப் பிரிவிலே நாள் ஒன்றுக்கு 76 நோயாளிகள் வந்து மிகச் சிறப்பாகச் சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். பொதுவாக அந்தந்த மருத்துவமனைக் கட்டடங்களிலே இந்திய மருத்துவப் பிரிவுகளுக்கென தேவையான அனைத்து வசதிகளும் மருத்துவமனை நிருவாகத்தால் செய்யப்படுகின்றன. அந்தவகையிலே, ஏரியூர், அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திலே செயல்படும் இந்தச் சித்த மருத்துவப் பிரிவிற்கு இடவசதி மற்றும் தேவையான பிற அனைத்து வசதிகளும் மருத்துவமனை வளாகத்திலே செய்யப்படுகின்றன. தனியாகத் தேவைப்படுகின்றபட்சத்திலே சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் மூலமாக தனியாகவும் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து பெண்ணாகரம் சித்த மருத்துவத் துறைக்கு பத்து இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த மருத்துவமனைக்குப் பணம் வழங்குகின்ற அளவிற்கு நிலைமை சீராக இல்லை. ஆகவே, ஏரியூரை மையமாக வைத்திருக்கிற அந்தப் பகுதியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் தனி ஒன்றியமாக அறிவித்தார்கள். அந்தப் பகுதி பரந்த மலைப் பகுதி. ஆகவே, அங்கு கட்டட வசதியின்மையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அங்கு கட்டடம் அமைத்துத் தருவதற்கு மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகதாசம்பட்டி சித்த மருத்துவமனை நன்றாக இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனைப் பகுதிக்குப் புதிய கட்டடம் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்திலே தெரிவித்த வார்த்தைக்கு தே.மு.தி.க. உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து அந்த வார்த்தையை நீக்கும்படி கோரிக்கை வைத்தார்கள். நான் ரெக்கார்டைப் பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இன்றைக்கு கவர்னர் உரை மீதான விவாதத்தில் உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசுகிறார், அப்போது பேசலாம். (குறுக்கீடு) இல்லை, உங்களுடைய கட்சி உறுப்பினர் காலையிலே வந்து நான் பேசப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் பேசிக்கொண்டிருக்கிறேன் அல்லவா?

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

நீங்கள் அனைவரும் எழுந்து நின்றால் எப்படி? நானும் அவரும் பேசிக்கொண்டிருக்கிறோம் அல்லவா? அவர் பேசியதற்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அப்படியிருக்கும்போது நீங்கள் இப்படி எழுந்து நின்றால் எப்படி? சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கவர்னர் உரையின்மீது நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, பொது விவாதத்தில் பேசலாம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, தனியாக எழுப்பமுடியாது. இவையெல்லாம் அவைக் குறிப்பில் வராது. (குறுக்கீடு) அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் வராது. கவர்னர் உரை மீதான விவாதம் இருக்கிறது. கவர்னர் உரை மீதான விவாதத்திலே உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசலாம். Zero hour-ல் பேசுவதைத் தனியாகப் பதிவு செய்ய முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். இல்லை, உங்களுடைய உறுப்பினர்கள் பேசுகிறார்கள். கவர்னர் உரைமீது நீங்கள் எல்லாம் பேசலாம். பேசினால் அதற்குப் பதில் கிடைக்கும். zero hour-ல் தனியாக எழுப்ப வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2015 பிப்ரவரி 18

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது zero hour இல்லையென்பது மூத்த உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அதனால் சபை நடவடிக்கைகளை நடத்த ஒத்துழைப்புக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் உரை மீதான விவாதம் நடப்பதால் இப்போது zero hour இல்லை. (குறுக்கீடு) அதையெல்லாம் பட்ஜெட் கூட்டத்தில் பேசிக்கொள்ளலாம். உங்களுடைய உறுப்பினர் பேசும்போது நீங்கள் என்ன பிரச்சினையை நேரம் இல்லா நேரத்தில் எடுக்க வேண்டுமென்று கருதுகிறீர்களோ அதைப் பேசிக்கொள்ளுங்கள். ஆகவே, சபையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்களே இந்த அவையிலே பலமுறை பேசியிருக்கிறீர்கள், zero hour-ல் பேசக்கூடாது என்று. கவர்னர் உரை மீதான விவாதம் இருக்கும்போது zero hour இல்லையென்று நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய கட்சி உறுப்பினர் விவாதத்தில் பேசும்போது பேசட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். நீங்கள் நாளைக்குப் பேசும்போதும் பேசலாம், உட்காருங்கள். Zero hour என்பது விதியில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு) Zero hour இன்று கிடையாது. ஆளுநர் உரை விவாதத்தின்போது, Zero hour என்று அனுமதிப்பதில்லை.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) விவாதத்தில் உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றபோது நீங்கள் என்ன பேச வேண்டுமென்று கருதுகிறீர்களோ அதைப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடுகள்) வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்பதற்காகத் தேவையில்லாமல் நீங்கள் இப்படியெல்லாம் செய்யாதீர்கள். உங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) வாய்ப்பு மறுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது நடைபெறப் போவது பொதுவான விவாதம். அந்த விவாதத்தில் நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுங்கள். அதில், உங்களுக்குப் பதில் கிடைக்கும்; அப்போது பேசுங்கள் உங்களுக்குப் பதில் கிடைக்கும்.